DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 270/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : சந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th **October 2025.**

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 5ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ஈச்சம்பொட்டல்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மாக் ஒயின்ஷாப் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். 07.05.2018ம் தேதி கருப்பசாமி என்ற சூப்பர்வைசர் போன் செய்து சங்கரன்கோவில் ரயில்வேபீடர் ரோட்டில் உள்ள டாஸ்மாக் அரசு கடை எண்.10665 யை உடைக்கப்பட்டது என்று கூறினார். நான் அந்த கடைக்கு வந்து பார்க்கும்போது கடையின் சேல்ஸ்மேன் நான்குபேர்கள் மாரியப்பன், கந்தசாமி, பெருமாள்சாமி, மனோகரன் ஆகியோர்கள் கடைக்கு முன்பு நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது டாஸ்மாக் ஓனர் சந்திரன் மற்றும் வாட்ச்மேன் பெரியமாடன் ஆகியோர்களும் அங்கு இருந்தார்கள். பெரியமாடன் வாட்ச்மேன் என்னிடம் அடையாளம் தெரியாத 5 நபர்கள் முந்தையநாள் இரவு

தன்னை கட்டிப்போட்டுவிட்டு கடையின் ஷட்டரை உடைத்து பாட்டிலை எடுத்துசென்றுவிட்டார்கள் என்று கூறினார். நாங்கள் எந்தந்த பாட்டில் காணாமல் போய்விட்டது என்று பார்த்தோம். Ancient case rum–52 பாட்டில்கள், Royal palace full –2 பாட்டில்கள், British empire half – 2 பாட்டில்கள், Imperial brandy half –3 பாட்டில்கள் மொத்தம் ரூ.12780 மதிப்புள்ள பாட்டில்களை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். கடையின் ஷட்டர் லாக்கை உடைத்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். நாங்கள் சரிபார்த்தபோது மேற்படி பாட்டில்கள் கடையில் இல்லை. காவல்நிலையத்தில் கடை சூப்பர்வைசர் கருப்பசாமி புகார் கொடுத்தார். அதன்பிறகு எங்கள் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தோம். கைரேகை நிபுணர்கள் வந்து கைரேகை தடயங்களை பதிவுசெய்தார்கள். காணாமல் போன பாட்டில்கள் பற்றி அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டு கடையை நடத்துமாறு எங்கள் மாவட்ட மேலாளர் கூறினார். அதன்பிறகு கடை நடத்தப்பட்டது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்கள் சூப்பர்வைசர் சொல்லித்தான் எனக்கு தெரியும். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரமான கைரேகை நிபுணர்கள் வந்து சம்பவம் நடைபெற்ற கடையில் கைரேகை தடயங்களை பதிவுசெய்தார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் சூப்பர்வைசர் என்பதை காண்பிக்கும் அடையாள அட்டை உண்டா என்றால் உண்டு. போலீசார் விசாரணையின்போது சூப்பர்வைசர் என்பதை காண்பிக்கும் அடையாள அட்டையை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நாங்கள் காணாமல் போனதாக சொல்லும் பாட்டில்களின் விபரம் பற்றிய பதிவு எதில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிய புகார் கடிதத்திலும், முந்தைய நாள் ஸ்டாக்

பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். மேற்படி பதிவேட்டில் உள்ள காணாமல் போன பாட்டில்களின் பதிவுகளை போலீசார் விசாரணையில் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். நான் முதல்விசாரணையில் கூறியதுபோல சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் நாளிற்கு மறுநாள் கடைக்கு செல்லவில்லை என்றாலும், காணாமல் போன பாட்டில்கள் பற்றிய பதிவு அடங்கிய பதிவேட்டை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிற்கு மறுநாள் கடைக்கு சென்றபோது கடைதிறந்திருந்ததா அல்லது நான் திறந்தேனா என்றால் கடையின் ஷட்டர் உடைக்கப்பட்டு கடைதிறந்திருந்தது. கைரேகை நிபுணர்கள் எனது கைரேகையை பதிவு செய்தனரா என்றால் பதிவுசெய்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**